**மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் நடைபெற்ற சம்பவம் குறித்து இன்று (23.2.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:-**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஒரு கிராமத்தில் இரு தனிப்பட்ட நபர்களிடையே முன் விரோதம் இருந்து வந்த நிலையில் 25.12.2014 அன்று வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் இருபிரிவினரில் ஒருவரின் பிறவி ஊமை மற்றும் காது கேளாத 13 வயது பெண் தன் பெற்றோர் வேலை செய்து கொண்டிருந்த நிலத்திற்குச் சென்று உணவு கொடுத்து விட்டு திரும்பியதாகவும், பிறகு தான் வீட்டிற்குச் சென்று பார்த்த போது பெண்ணைக் காணவில்லை என்றும் தேடிப் பார்த்த போது தன்னுடன் தகராறு செய்தவரின் நிலத்தில் பாதி மயக்க நிலையில் இருந்ததாகவும், விசாரித்த போது தான் வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கும் போது தங்கள் நிலத்தின் வழியாகப் போகக் கூடாது என்று கூறி நால்வர் (இரு ஆண்கள், இரு பெண்கள்) தலை, வயிற்றில் அடித்தும் தொடையில் மிதித்தும் தாக்கியதாக சைகை மூலம் தெரிவித்ததாகவும், மறுநாள் காலை தேன்கனிக்கோட்டை மருத்துவமனையில் சேர்த்ததாகவும், பேச இயலாததால் அப்பெண் வாக்குமூலம் கொடுக்க இயலாததால், தான் வாக்குமூலம் அளிப்பதாக அப்பெண்ணின் தந்தை மருத்துவனையில் இருந்து பெற்ற அறிவிப்பின் பேரில் அஞ்செட்டி காவல் நிலையத்திலிருந்து வந்து விசாரித்த காவலரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிரியின் தரப்பிலும் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதில் தங்கள் மீது பொய்ப்புகார் கொடுக்க ஏற்பாடு நடப்பதாக அஞ்சுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் 31.12.2014 அன்று தேன்கனிக்கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் பெண்ணின் தந்தை அளித்த புகாரில், தனது மகளை அதே ஊரைச் சேர்ந்த முத்தப்பா, மாதப்பா, ருத்ரப்பா மற்றும் சித்தலிங்கப்பா ஆகியோர் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார். அப்புகாரின் அடிப்படையில் தேன்கனிக்கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண்.20/2014, ச/பி 341, 324, இதச பிரிவு 5 (g) மற்றும்

6 Protection of Children from Sexual Offences Act 2012 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில், தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் புலன் விசாரணை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட சிறுமியை ஒசூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பியுள்ளார். ஒசூர் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரி அச்சிறுமியை மருத்துவ பரிசோதனை செய்துள்ளார். பின்னர் தேன்கனிக்கோட்டை நீதித்துறை நடுவர் முன்பு அச்சிறுமி ஆஜர்படுத்தப்பட்டு, வாய் பேசாத மற்றும் காது கேளாதோருக்கான பள்ளி ஆசிரியர் உதவியுடன் அவரது வாக்குமூலம் பிரிவு 164 கு.வி.மு.ச. படி பதிவு செய்யப்பட்டது. அச்சிறுமியைப் பரிசோதனை செய்த மருத்துவ அலுவலர் தனது அறிக்கையில் அச்சிறுமி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படவில்லை என்றும், பாலியல் பலாத்காரம் தொடர்பான காயங்கள் ஏதுமில்லை என்றும் அறிக்கை அளித்தார். இவ்வழக்கு புலன் விசாரணையின் அடிப்படையில், 01.01.2015 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 376 (d), உ/இ 511 இதச 341, 323 மற்றும் பிரிவு 11 (i) & (ii) மற்றும் 12 Protection of Children from Sexual Offences Act 2012 ஆக மாற்றம் செய்யப்பட்டு, முத்தப்பா, மாதப்பா, ருத்ரப்பா (எ) சென்னபசப்பா மற்றும் சித்தலிங்கா ஆகிய நான்கு எதிரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதற்கிடையே பெண்ணின் தந்தை மேற்படி வழக்கை மத்திய புலனாய்வுத்துறை (CBI) விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட வேண்டுமெனக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை 30.01.2015 அன்று விசாரித்த நீதிமன்றம், பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு தர்மபுரி அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்யப்பட வேண்டுமென்றும், வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் சேலம் மத்திய சிறைக்கு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றும், மேலும் மாவட்ட நிர்வாகம் பெண்ணின் தந்தைக்கு ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை 13.02.2015 அன்று ஒத்தி வைத்தது.

நீதிமன்ற உத்தரவுப்படி வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் சேலம் மத்திய சிறைக்கு மாற்றம் செய்யப்பட்டனர். மேலும் 03.02.2015 அன்று மாவட்ட நிர்வாகம் நீதிமன்ற உத்தரவுபடி, பெண்ணின் தந்தைக்கு ரூ.20 ஆயிரம் வழங்கியது.

நீதிமன்ற ஆணைக்கிணங்க சிறுமியைக் காவல்துறையினர் 01.02.2015 அன்று தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து பரிசோதனைக்கு உட்படுத்தினர். மருத்துவப் பரிசோதனைக்குபின், இடது மார்பில் மேலோட்டமான ஆறிய சிராய்ப்புக் காயம் ஒன்றும், இடது மேல் தொடையில் மேலோட்டமான ஆறிய தழும்பு ஒன்றும் உள்ளதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பாலகிருஷ்ணன் (சிபிஐ–எம்) கூறியுள்ளது போல காவல் துறையினர் புகார்தாரரை மாறி மாறி அலைக்கழித்து புகாரை வாங்க மறுத்துள்ளார்கள் என கூறுவதில் உண்மையில்லை. சம்பவம் நடந்த பிறகு அஞ்செட்டி காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை முதற்கட்டமாக அளித்த புகாரை மனு எண் ஆகப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். பின்னர் அவர் தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 31.12.2014 அன்று அளித்த புகாரின் பேரில் உடனடியாக வழக்கு பதிவு செய்து காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். பெண்ணின் தந்தை அஞ்செட்டி காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் சரியான முறையில் விசாரணை செய்யாததற்காக அக்காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஒருவரும், சம்பவம் குறித்து மாவட்ட தனிப்பிரிவிற்கு சரியான முறையில் தகவல் அளிக்காத தனிப்பிரிவு தலைமைக் காவலர் ஒருவரும் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வழக்கை சரியான முறையில் கண்காணிக்காத அஞ்செட்டி காவல் ஆய்வாளர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி சங்கத்தினர் வற்புறுத்திய பிறகே காவல் துறையினர் தலையிட்டனர் என்ற கூற்றில் உண்மையில்லை.

மனுதாரரை ஆய்வாளர் பூட்ஸ்காலால் மிதித்ததாகக் கூறுவது உண்மையல்ல என்று விசாரணையில் தெரியவருகிறது.

மேலும் சட்டமன்ற உறுப்பினர், இச்சம்பவம் தொடர்பாக அக்கிராமத்தில் பஞ்சாயத்து நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தும் பயன் ஏதுமில்லை என்று கூறியிருப்பதைப் பொருத்தமட்டில், காவல்துறையினர் அப்புகார் சம்பந்தமாக மனு எண் 4/2015 ஆகப் பதிவு செய்து மேற்கொண்ட விசாரணையில் பெண்ணின் தந்தை

தற்பொழுது தன் மகளுடன் அதே கிராமத்தில் வசித்து வருவதாகவும், தன் மீதும், தன் குடும்பத்தின் மீதும் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

சிறுமி 26.12.2014 அன்று தேன்கனிக்கோட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது மூன்று தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதாகத்தான் மருத்துவமனைப் பதிவேட்டில் மருத்துவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர், ஒசூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அளித்த அறிக்கையில் சிறுமி கற்பழிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார். இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரத்திற்கும் 09.02.2015 அன்று நீதிமன்ற உத்தரவின்படி தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கூறப்பட்டுள்ளதற்கும் முரண்பாடு உள்ளது. வேவ்வெறு மருத்துவ அறிக்கைகள், நீதிமன்ற நடுவரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், வேவ்வெறு சமயங்களில் கொடுக்கப்பட்ட புகார்கள் ஆகியவற்றில் உள்ள முரண்பாடுகளைக் கணக்கில் கொண்டு மேல் விளக்கம் கேட்டு புலன் விசாரணை அதிகாரி மருத்துவரிடம் கேள்விகள் கேட்டது தவறாகாது.

மருத்துவருக்கு questionnaire எனப்படும் கேள்வி தொகுப்பை அளித்து பதிலைப் பெறுவது வாடிக்கையான ஒன்றுதான். பாதிக்கப்பட்டவர் பெண் என்பதையும், மேலும் சிறுமி என்பதையும் கருத்தில் கொண்டு மருத்துவ அறிக்கைகளில் உள்ள விவரங்களை இங்கு கூறுவதைத் தவிர்ப்பது நலம் என்று கருதி அவற்றை இப்போது விவரிக்கவில்லை.

ஆயினும், மருத்துவ நிபுணர்களின் கருத்தின் அடிப்படையிலும், சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலும் விசாரணைத் தொடரப்படும். பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைப்பதிலும், குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனைப் பெற்றுத் தருவதிலும் இவ்வரசிற்கு எவ்வித தயக்கமும் இல்லை என்பது மட்டுமன்றி அவ்வாறே இவ்வழக்கை கையாள காவல்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் குறித்து, பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு 13.02.2015 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது அம்மனுவை விசாரித்து வந்த உயர்நீதிமன்ற நீதிபதி, அம்மனு குற்றவியல் சம்பந்தப்பட்ட மனுவாக இருப்பதால், குற்றவியல் வழக்குகளை விசாரித்து வரும்

நீதிபதியின் விசாரணைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டு தேதி குறிப்பிடப்படாமல் மனுவை ஒத்தி வைத்துள்ளார். அம்மனு நிலுவையில் இருந்து வருகிறது.

கற்பழிப்பால் பாதிக்கப்பட்ட நபரின் அடையாளத்தை வெளியிடுவது இந்திய தண்டனைச் சட்டம் 228 (A) பிரிவின்படி இரண்டாண்டு சிறை தண்டனைக்குரியதாகும். மேலும், குழந்தைகளுக்கு பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாப்பு எனப்படும் சட்டத்தின் பிரிவு 23ன் கீழ் ஊடகங்களில் வெளியிடப்படும் எந்த அறிக்கையும் பாதிக்கப்பட்ட குழந்தையின் பெயர், விலாசம் அல்லது அக்குழந்தையின் அடையாளம் தெரிவிக்கும்படியான எந்த விவரத்தையும் வெளியிட்டால் அதற்கு குறைந்தபட்ச தண்டனை ஆறு மாதம் சிறைத் தண்டனை ஆகும். அக்கட்சியின் பத்திரிக்கையான தீக்கதிர் 18.02.2015 தேதியிட்ட இதழில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டுள்ளது மேற்குறிப்பிட்டுள்ள பிரிவுகளின் கீழ் குற்றமாகும்.

காவல் துறையினர் இவ்வழக்கில் சேகரிக்கப்பட்ட சாட்சியங்கள் அடிப்படையில் படிப்படியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளனர். தற்போது, பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை தாக்கல் செய்த மனு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதால், மனுதாரரின் கோரிக்கைகள் குறித்து நீதிமன்றம் அளிக்கும் உத்தரவின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அப்பெண்ணின் குடும்பத்திற்குத் தக்க பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு புலன்விசாரணையில் இருந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*****